குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி ஒரு தாலுகா தலைமையிடம் என்பதால் அரசு அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர்கள் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் செயல்படுத்த இயலாது. மேலும், தற்போதுள்ள நிதிநிலைமையினைக் கருத்தில்கொண்டால் அரசு அலுவலர்களின் வாடகைக் குடியிருப்பு கட்டுவதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 224, திரு. கோ. இரவிராஜ். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

224—

கால்நடை மருந்தகம்

***10508—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், உளுந்தை கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தணி தொகுதியிலே, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உளுந்தை கிராமத்தைச் சுற்றி கிட்டத்தட்ட 50 கிராமங்களுக்கு மேலாக, விவசாயப் பெருங்குடி மக்கள் கால்நடைகளைப்

[2002 ஏப்ரல் 24

பராமரித்து வருகிறார்கள். அங்கே அரசு சார்பிலே உரிய மருந்தகம் இல்லை. எனவே, அப்பகுதி மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட வேண்டுமென கோரிக்கை வைத்து, அதனை அமைப்பாரா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், உளுந்தை கிராமம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகிறது. இக்கிராமத்திலே கால்நடை கிளை நிலையமும், இக்கிராமத்திலிருந்து 5 கிலோமீட்டர் தூரத்தில் வயலூரில் ஒரு பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. இக்கிராமம் மற்றும் இதனைச் சுற்றியுள்ள கிராமத்தில் சுமார் 1,200 கால்நடைகளே உள்ளன. மேற்படி கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து இருப்பதாலும், உளுந்தை கிராமத்தில் தற்போது ஒரு கால்நடை கிளை நிலையம் இயங்கி வருவதாலும் மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்கு கடம்பத்தூர், பேரம்பாக்கம் மற்றும் மப்பேடு கால்நடை மருந்தகங்களின் மூலமாக சிகிச்சைப் பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாலும் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் உளுந்தை கிராமத்திற்கு புதிய கால்நடை மருந்தகம் தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை அவையின்மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உசேன், உங்களுக்கு உளுந்தை கிராமம் எங்கேயிருக்கிறது என்றாவது தெரியுமா? சொல்லுங்கள்.

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: என்னிடம் உள்ள வினாத்தாளில் வினா எண்கள் 223, 224 மற்றும் 225 ஆகிய வினாக்கள் பதிவுபெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய வினாத்தாளிலா?

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: வெறும் தாளாக இருக்கிறது. இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இனிமேல் அதைப் பரிசீலித்து வைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது, கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் வராது. என்னுடைய துறையின்கீழ்தான் வரும்.

2002 ஏப்ரல் 24]

வினா எண் 225, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

225—

விடுதிக் கட்டடம்

***11092—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், இராமியனஹள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக மாணவர் விடுதி கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதையும் தாங்கும் இதயம் கொண்ட எங்கள் கழகக் காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி விடை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், இராமியனஹள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட விடுதிக்கு அருகில் தேவையான அரசு புறம்போக்கு நிலம் அல்லது தானமாக வழங்கும் நிலம் கிடைக்கும்போது அரசின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வணங்குகின்ற இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நிதியாண்டில் எனது தொகுதியில் மட்டும் தமிழகத்தில் அதிகப்படியான 6 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி